**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் - 02 - 2022**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3029 எஸ்ஆர்ஜ மற்றும் 3030 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.10(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறான தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் 2 இன் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 118 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் அல்லது நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 59.3 சதவீதத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் அல்லது நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 15.3 சதவீதம் ஆசிய அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் மிகுதித் தொகை அல்லது 25.4 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மேலும், நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயத்தில் ரூபா 13,917 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107.05 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரம் கொழும்பு மாநகர சபையால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நடவடிக்கைகளிற்காக ரூபா 1,423 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.95 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் அமுல்ப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்களை கொண்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 ஆனது அதன் நடவடிக்கைகளை 2014 செத்தெம்பர் 03 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. பின்னர் நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் காலப்பகுதியானது 2022 ஒக்தோபர் 24 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2:1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கங்களை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டம் - செயற்திட்டம் 2 இன் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள்/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டுக் கூறின் கீழ் ICB 04 முக்கிய ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்ட ரூபா 745 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 2 மில்லியன் தொகையான மிகுதி முற்பண அறவீடு மற்றும் ரூபா 689 மில்லியன் அந்நியச் செலாவணி வேறுபாடு என்பன நிதிக்கூற்றிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 1,434 | 2023 ஆம் ஆண்டில் குறித்த தொகைக்கு சீராக்கல் நாட்குறிப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இது போன்ற கணக்கீட்டுக் குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிநாட்டு நாணயத்தில் 03 உப-ஒப்பந்ததாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் தொடர்பாக நாணயமாற்று விகித தளம்பல் வேறுபாடுகளின் மொத்தத் தொகை நாணயமாற்று விகித தளம்பல் கணக்கில் செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக சிவில் வேலைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளது. | 285 | நாட்குறிப்பு பதிவு 2023 இல் ஒரு திருத்தப் பதிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இது போன்ற கணக்கீட்டுக் குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாண இல. 502(2) | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து சொத்துக்களும் தற்காலிகமாக செயற்திட்ட முகாமைத்துவ அலகில் வைத்திக்கப்படுவதாலும் அவ்வப்போது அந்த சொத்துக்கள் தலைமை அலுவலகத்திற்கு மாற்றப்படுவதாலும் PMU இல் நாங்கள் ஒரு பொருளிருப்பு பதிவேட்டை பேணுகிறோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாண இல. 128(1)இ, இல.507, இல.756 | வருடாந்த நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் வருடாந்த பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2023 ஏப்ரல் 10 வரையிலும் அது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு ஆண்டும் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுகிறது. அதற்கான ஆவணம் விரைவில் அனுப்பப்படும். | விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 பௌதீக முன்னேற்றம்

2014 செப்தெம்பர் 03 இல் இச் செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை தொடங்கியதுடன் அடிப்படை உடன்படிக்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் 2019 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும் முகாமைத்துவம் எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்ளத் தவறியதால் 2022 ஒக்தோபர் 22 வரை செயற்திட்டத்தின் காலப்பகுதி நீடிக்கப்பட வேண்டியிருந்தது. காலப்பகுதி நீடிக்கப்பட்டதன் பின்னர் இரண்டு மாதங்கள் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 89.92 சதவீதம் மற்றும் 83.28 சதவீதமாக இருந்தது. 2022 இன் முன்னேற்ற அறிக்கை மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் கொழும்பு நகரின் மேற்குப் பகுதியில் NRW குறைப்புக்கான முறைமை புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் கிட்டத்தட்ட முடிவடைந்துள்ளதுடன் செயற்திட்டத்தின் ஏனைய பகுதியின் முன்னேற்றம் பின்வருமாறுள்ளன.

| நடவடிக்கைகள் | அலகுகள் | எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட இலக்கு | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு நகரத்தின் தெற்குப் பகுதியில் NRW குறைப்பிற்கான முறைமைப் புனரமைப்பு - (ICB 04) | மீற்றர் | 211,032 | 212,093 | கொடுக்கப்பட்ட காலத்திற்குள் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள முடியாமல் போகலாம். | குழாய் பதித்தல், அழுத்தம் சோதனை செய்தல், சுத்தப்படுத்துதல் மற்றும் கிருமி நீக்கம் செய்தல் ஆகியன பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சேவை இணைப்பு மாற்றம் நடைபெற்று வருகிறது. 08 DMAs ஆனது செயற்பாடுகளுக்காக O&M இற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவை PZT பூர்த்தி செய்யப்பட்டதும் விரைவில் ஒப்படைக்கப்படும். | வழங்கப்பட்ட காலத்திற்குள் இலக்கு அடைந்து கொள்ளப்பட வேண்டும். |
| – குழாயிடல் | வீட்டு உரிமை | 28,882 | 16,323 | | | |
| – சேவை மாற்றங்கள் | எண்ணிக்கைகள் | 23 | 01 | | | |
| DMA முன்னேற்றம் (முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு RSC இற்கு கையளிக்கப்பட்டது) | | | | | | |
| – ஒட்டுமொத்த ஒப்பந்த முன்னேற்றம் | சதவீதம் | 100 | 85.3 | | | |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் நிலை-2 தொடர்பாக வீட்டு இணைப்பு மாற்றங்களை வழங்குவதில் 57 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் பூர்த்தி செய்யப்பட்டு NWSDB இற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய 23 DMAs இல் ஒன்று மாத்திரமே மீளாய்வாண்டின் இறுதியில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மேலும், 12,559 வீட்டு இணைப்பு மாற்றங்கள், 140,640 மானி அழுத்த சோதனை பணிகள், 149,109 நிரந்தர வீதி மறுசீரமைப்பு பணிகள் மற்றும் 174,098 சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி பணிகள், மிகுதி நிறுவல் வால்வு அறைகள், வீதி கடக்கும் பணிகள் மற்றும் 2023 யூலை 31 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயலிழக்கும் பணிகள் போன்ற மீதமுள்ள பணிகள் செயற்திட்ட பூர்த்தி செய்தலின் போது காணப்பட்டன. | மேலே 4.1.1 மற்றும் 4.2.2 இல் விபரிக்கப்பட்டவாறு பொதி 03 மற்றும் பொதி 04 இன் கீழ் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பணி அட்டவணையின் பிரகாரம் மிகுதிப் பணிகளை பூர்த்தி செய்தல் தொடர்கிறது. இந்த இரண்டு ஒப்பந்தங்களின் கீழ் அனைத்து வேலைகளும் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செயயப்படும். | செயற்திட்டத்தின் மிகுதிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு தீர்வு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 31.5 மில்லியன் பெறுமதியான 25 DMA மானிகள் ICB ஒப்பந்தம் 03 மற்றும் 04 இன் கீழ் கொழும்பு நகரின் தெற்கு பகுதியின் 19 மற்றும் 23 மாவட்ட அளவீட்டு பகுதியில் நிறுவப்பட்டுள்ளதுடன் ரூபா 24 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 164,167 பெறுமதியான 19 DMA மானிகள் நீர் ஓட்ட மானி தரவுகளை சேகரிப்பதற்காக கொழும்பு நகரின் மேற்குப் பகுதியில் ICB 03 ஒப்பந்தத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. எனினும் கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 30 இல் மேலே உள்ள 44 இல் 30 DMA மானிகள் குறைபாடுடையதாகவே இருந்தது. | வெளியேற்றும் பற்றரிகளின் சிக்கலைத் தீர்ப்பதற்கு அந்த பற்றரிகளுக்குப் பதிலாக புதிய பற்றரிகளை வழங்குவதற்கு செயற்திட்டம் நடவடிக்கையை எடுத்துள்ளது. | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த நலனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 19 மானிகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மூன்று வருட உத்தரவாதக் காலப்பகுதியுடன் கொள்வனவு செய்யப்பட்டன. மேலும், 16 மானிகளின் உத்தரவாதக் காலப்பகுதி நிறுவப்பட்ட திகதியில் காலாவதியாகியிருந்தமையும், கொள்வனவு செய்த திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னர் அனைத்து மானிகளும் நிறுவப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. எனினும் வழங்குநரால் வழங்கப்பட்ட செயற்படுத்தல் திகதிக்குப் பின்னர் ஒரு வருடத்திற்கான பராமரிப்பு காலப்பகுதியும் காலாவதியாகியிருந்தது. | ஓட்ட மானிகளை நிறுவுதல் தவிர்க்க முடியாமல் தாமதமானது, இதன் விளைவாக அவற்றின் நிறுவுதல் நடைபெறுவதற்கு முன்னர் உத்தரவாதக் காலப்பகுதி முடிவடைகிறது. | நட்டத்தை குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இந்த செயற்திட்டத்தின் அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் 2024 ஒக்தோபர் 24 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மீதமுள்ள 17 மாவட்ட அளவீட்டுப் பகுதிகளுக்கு DMA மற்றும் Logger மானிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஓட்ட அளவீடுகளை வழங்க இயலாமைக்கான காரணம் வெளியேற்றப்பட்ட பற்றரிகளாகும். எனினும், பற்றரிகள் மாற்றப்பட்டவுடன் ஓட்ட மானிகள் முழுமையாக செயற்படும். | மானி நிறுவும் பணியை பூர்த்தி செய்வதற்கும், நிறுவப்பட்ட ஓட்ட மானிகளை பேணுவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | NRW விகிதத்தை 18 சதவீதத்திற்கும் குறைவாக வைத்திருப்பதே செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்த போதிலும் வருமானமற்ற நீர் முகாமைத்துவப் பிரிவில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் ICB-3 ஒப்பந்தத்தின் கீழ் குழாய் பதித்தல் மேற்கொள்ளப்பட்ட 19 மாவட்ட அளவீட்டுப் பகுதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள 12 ஏ மற்றும் 22 ஆகிய 2 மாவட்ட அளவீட்டு பகுதிகளில் | அதிக வருமானமற்ற நீரிற்கு (NRW) காரணம் தற்போதுள்ள வலையமைப்பில் கசிவுகள் இருப்பது ஆகும், தற்போது கசிவு கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கசிவுகள் கண்டறியப்பட்டு திருத்தம் செய்யப்பட்டவுடன் NRW பெறுமதி குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. | சட்டவிரோத இணைப்புக்கள், கசிவுகள் போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும், NRW சதவீதத்தை 18 சதவிகிதத்திற்கும் குறைவாக வைத்திருப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வருமானமற்ற நீரின் விகிதம் மீளாய்வாண்டின் இறுதியளவில் முறையே 25.80 சதவீதம் மற்றும் 24.88 சதவீதம் என்ற உயர் பெறுமதியை அடைந்துள்ளன.

**3.3 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட புறம்பான செயற்பாடுகள்/ கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக NWSDB இன் மானி வாசிப்பு பதவியணியினரிற்கு 1,940 சீருடைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 3.5 மில்லியனை செயற்திட்டம் செலவிட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட கேள்வி நடைமுறைகள் மற்றும் கொடுப்பனவு நடைமுறைகள் மற்றும் முறையான ADB அங்கீகாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சீருடைகளுக்கான குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகிறது. | செயற்திட்ட முகாமைத்துவமானது செயற்திட்ட நோக்கெல்லைக்குள் உள்ள நடவடிக்கைகளுக்கு செயற்திட்ட நிதிகளைப் பயன்படுத்துவதை எப்போதும் கடைபிடிக்க வேண்டும். |

**3.4 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தெளவல பயிற்சி நிலையம் வணிக அடிப்படையில் பயன்படுத்தும் திறனுடன் ரூபா 1,550 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 2022 திசெம்பரில் திறக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், மொத்த செலவினம் மற்றும் வருமானம் முறையே ரூபா 7.58 மில்லியன் மற்றும் ரூபா 4.32 மில்லியனாக இருந்தது. மேலும், ரூபா 7.22 மில்லியன் பெறுமதியான முழு வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகம், 2 எண்ணிக்கையிலான கணனி ஆய்வுகூடங்கள், நூலகம் மற்றும் ரூபா 4.1 மில்லியன் பெறுமதியான உடற்பயிற்சி உபகரணத்துடனான உடற்பயிற்சிக் கூடம் என்பன விளைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பயிற்சி நிலையம் O&M இடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களால் திறக்கப்பட்டது. CEWAS இன் முகாமைத்துவம் பல்வேறு வழிகளில் பயிற்சி நிலையத்தை ஊக்குவித்து விளம்பரப்படுத்துவதற்கு தீவிரமாக முயன்று வருகிறது. இந்த விளம்பர முயற்சிகளை வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதன் மூலம் CEWAS ஆனது அதிக வாய்ப்புக்களை ஈர்த்து, அதன் சேவைகளை விரிவுபடுத்த முடியும். | மொத்த சொத்துக்களையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருமானமற்ற நீர் சதவீதத்தை 18 சதவீதத்திற்கும் குறைவாக குறைக்கும் நோக்கத்துடன் இந்த செயற்திட்டம் தொடங்கப்பட்டு 2022 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், | உருப்படி 4.1.1, 4.1.2 மற்றும் 4.1.3 இன் கீழ் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ICB 03 மற்றும் ICB 04 ஒப்பந்தங்களின் கீழ் பணிகள் வெற்றிகரமாக | செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| தொடங்கிய திகதியிலிருந்து 99 மாதங்கள் கடந்திருந்தும் 42 இல் 07 DMAS மாத்திரமே முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு NWSDB இடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், கடன் மீள்கொடுப்பனவுகள் தொடங்கப்பட்டு ரூபா 2,902.76 மில்லியன் செலுத்தப்பட்டதுடன் கடப்பாட்டுக் கட்டணங்களாக ரூபா 9.27 மில்லியனும் வட்டியாக ரூபா 295.86 மில்லியனும் 2022 திசெம்பர் 31 இல் அரசாங்கத்தால் செலுத்தப்பட்டிருந்தது. | பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள பணிகள் மாத்திரமே நடைபெற்று வருகின்றன. ADB கடன் முடிவடைவதற்குள் அனைத்து மாவட்ட அளவீட்டு பகுதிகளும் (DMAs) செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு (O&M) குழுவிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. |

### 3.5 தீர்க்கப்படாதுள்ள முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இச் செயற்திட்டத்தின் கீழ் பாமன்கடவில் உள்ள பகுதி பொறியியலாளர் அலுவலகத்தின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டதுடன் நிர்மாணத்திற்கான காணி கிடைக்காததால் அது தொடங்கப்படாததுடன் செயற்திட்டத்தின் தற்போதைய காலம் போதாததால் புதிய நிர்மாணங்களுக்கு ERD ஆல் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக அந்நோக்கத்திற்காக 2022 திசெம்பர் 31 வரை ஏற்பட்ட ரூபா 28.19 மில்லியன் ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் ரூபா 1.45 மில்லியன் காணி சுவீகரிப்புக் கட்டணங்கள் இந்த செயற்திட்டத்திற்கு நட்டமாகியிருந்தன. | முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் நிர்மாணம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது, எனினும், நாங்கள் அங்கீகாரத்தை பெற்றவுடன் இந்த வடிவமைப்பை எந்த நேரத்திலும் பயன்படுத்தலாம். | அதிகாரிகளின் அலட்சியத்தால் ஏற்படும் நட்டங்கள் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அறவிடப்பட வேண்டும். |

### 3.6 செயற்திட்ட நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ICB-4 ஒப்பந்தத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டு கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்ட 45 வீதிகள் தொடர்பாக ரூபா 16.04 மில்லியன் பெறுமதியான பாதுகாப்பு வைப்பை அறவிடுவதற்கு செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதமுள்ள பிணை வைப்பை அறவிடுவதற்கான நினைவூட்டல்களுடன் அவ்வப்போது கோரிக்கை கடிதங்கள் CMC இற்கு அனுப்பப்பட்டுள்ளன. | மேலதிக தாமதமின்றி பிணை வைப்பை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் செயற்திட்டம் பூர்த்தியடைந்து 6 மாதங்கள் கடந்த பின்னரும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் ரூபா 5,434,112 பெறுமதியான நிலையான சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்படைப்பு பணி செயன்முறையில் உள்ளது. | NWSDB இற்கு முறையான வழியில் சொத்துக்களை ஒப்படைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது குறித்துக்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கைகளுக்காக உள்ளக கணக்காய்வுக்கு தெரிவிக்கப்படுகிறது. | உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளில் உள்ளக கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |